**செ. கு. எண்: 037** **நாள்: 03.03.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 3.3.2019</u>

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், சாத்தம்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. மலைச்சாமி என்பவரின் மகன் திரு. அஜித் என்பவர் விவசாய நிலத்தில், அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், நொளம்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயராமன் என்பவரின் மகன் திரு. ஜெ. அருள்தாஸ் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பி பட்டு, மின்சாரம் தாக்கியதில், உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், மைக்கேல்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குருசாமி என்பவரின் மகன் திரு. முத்துசாமி என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், நெம்மேலி கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் திரு. முருகையன் என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை எதிர்பாராதவிதமாக மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், ஓடைமறிச்சான் கிராமத்தைச் சேர்ந்த திரு. இருதயராஜ் என்பவரின் மகன் திரு. ஞானபிரகாஷ் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதில், உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா என்பவரின் மகன் திரு. ராமசாமி என்பவர் புல் அறுக்கச் சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், கஞ்சப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராஜாமணி என்பவரின் கணவர் திரு. குருநாதன் என்பவர் மின் கம்பத்தின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த இரு சக்கர வாகனத்தை எடுக்க முற்பட்ட போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, கீழ்பாக்கம் சாஸ்திரி நகர் பகுதியில் அமைந்துள்ள மின் இணைப்பு பெட்டியை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நாகூரான் என்பவரின் மகன் திரு. பாபு என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், பாவுபட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னதுரை மற்றும் அவருடைய மனைவி திருமதி விருத்தாம்பாள் ஆகிய இருவரும் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், குண்டியாந்தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தம்பு என்பவரின் மகன் திரு. முனியன் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை எதிர்பாராத விதமாக மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், முதலியார்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரப்பன் என்பவரின் மகன் திரு. சக்திவேல் என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், காளாச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜன் என்பவரின் மனைவி திருமதி பானுமதி என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆதிமணி என்பவரின் மகன் திரு. ஆனந்த் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், கட்டகுடி கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாத்துரை என்பவரின் மனைவி திருமதி புஷ்பம் என்பவர் பாம்பு கடித்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், நெழலி கிராமத்தைச் சேர்ந்த திரு. தருமர் என்பவர் பல்லடம் வட்டம், காட்டூர் கிராமம், வெள்ள நத்தம் பகுதியில், மின்கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், அ. வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரபாகரன் என்பவரின் மனைவி திருமதி கேத்தரின் நித்யா என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், உ. பாத்திமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மிக்கேல்ராஜ் என்பவர் மின்கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், அரிச்சந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கல்யாணசுந்தரம் என்பவரின் மகன் திரு. ராஜாராமன் என்பவர் மின்இணைப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக விஷ வண்டு கடித்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லத்துரை என்பவரின் மகன் திரு. அஜித்குமார் என்பவர்

விளையாடச் சென்ற இடத்தில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தென்தாமரைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தாசன் என்பவரின் மகன் திரு. சந்திரன் என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்துள்ளார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த **21** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்த **21 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**